மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்குப் பிறகு, அவையின் பிற அலுவல்களை ஒத்தி வைத்து, இத்தீர்மானம் குறித்து விவாதிக்க வேண்டிய தேவை இல்லை என்ற காரணத்தினால் இதற்கு அனுமதி மறுக்கப்படுகிறது.

6. கவன ஈர்ப்பு.

(அ) சென்னை துறைமுகத் தொகுதி வள்ளுவர் நகரில் ஏற்பட்ட தீ விபத்து குறித்து.

திரு. அ. செல்வராசன் : சென்னைத் துறைமுகத் தொகுதி 12-வது வட்டம், வள்ளுவர் நகரில் 21—3—1978 (காலை இல்லை மாலை) மாலை 4.30 மணிக்கு ஏற்பட்ட தீ விபத்தில் குடியிருப்புகள் எரிந்து விட்டது பற்றியும், அதனால் ஏற்பட்டுள்ள இழப்புகள் குறித்தும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

(முற்பகல் 10–20)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் கொடுத்ததில் காலை என்று தான் இருக்கிறது. வேண்டுமானால் மாலை என்று திருத்திக் கொள்ளலாம். இவர்கள் தவறாக இப்படி அடித்து விட்டார்களோ என்று பார்த்தேன். அவர்கள் கொடுத்ததில் காலை என்றுதான் இருக்கிறது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : தலைவரவர்களே, 21—3—78 அன்று மாலை 4.30 மணிக்கு சென்னை பிராட்வே வள்ளுவர் நகரில் தீ விபத்து ஏற்பட்டு 25 குடிசைகள் பாதிக்கப்பட்டன. தீயணைப்புப் படையினரும் அந்தப் பகுதி மக்களும் சேர்ந்து தீயை அணைத்தனர். தீ விபத்திற்கான காரணம் தெரியவில்லை. பொருட்சேதம் ரூ. 17,620. இத் தீ விபத்தினால் உயிர் சேதம் மற்றும் கால்நடைச் சேதம் ஏதுமில்லை.

2. முழுமையாகப் பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு குடிசை ஒன்றுக்கு ரூ. 80/- வீதமும் பகுதியாகப் பாதிக்கப்பட்ட குடிசைகளுக்கு குடிசை ஒன்றுக்கு ரூ. 40/- வீதமாக மொத்தம் ரூ. 1,280/- மான்யமாக வழங்க சென்னை மாவட்ட ஆட்சியர் 23—3—78 அன்றே ஒப்புதல் வழங்கி தாசில்தார் அவர்களை பணத்தை பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக வழங்க ஆணையிட்டுள்ளார்.

திரு. அ. செல்வராசன் : இதுவரையில் அந்தப் பகுதி மக்களுக்கு அந்த பணம் வந்து சேர்ந்ததாக எனக்கு தகவல் கிடையாது. இந்தக் குடிசைகள் ஏராளமாக இருப்பதால்தான் திராவிட

முன்னேற்றக் கழக அரசு இந்தக் குடிசைகளை மாற்றி மாடி வீடுகள் கட்டுகிற ஒரு நல்ல வாய்ப்பினை ஏற்படுத்தி தந்திருந்தது. இந்தப் பகுதியில் சுமார் 150 குடிசைகள் உள்ளன. நான் குடிசை மாற்று வாரியத்தில் உறுப்பினராக இருந்த போது அந்தக் குடிசைகளை எல்லாம் அதிகாரிகள் பார்வையிட்டு அந்தக் குடிசைகளை மாடி வீடுகளாகக் கட்ட திராவிட முன்னேற்றக் கழக அரசினால் வரைபடம் தீட்டப்பட்டு அது அப்படியே நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

ஆகவே இந்த அரசு உடனடியாக அருள் கூர்ந்து அந்தக் குடிசைகளை மாற்றி நல்ல மாடிவீடுகளாகக் கட்டித்தர வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொள்வதோடு அங்கே தீ பற்றி எரிந்தவுடன் சென்னை மாநகராட்சி மன்றத்திலிருந்து ஐந்து வேளை அவர்களுக்கு உணவு அளித்திருக்கிறார்கள், ஐந்து நாட்கள் அல்ல, ஐந்து வேளை. இதை வைத்து எப்படி அவர்கள் வாழ்வார்கள் என்று யோசிக்க வேண்டும். அவர்களுக்கு . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேச்சு இல்லை. உங்களுக்குள்ள சந்தேகங்களை சுருக்கமாக சொல்லி, நிவர்த்தி செய்து கொள்ளுங்கள்.

திரு. ஏ. செல்வராஜ்: ஆகவே உடனடியாக அவர்களுக்கு பணம் கிடைக்கவும் அந்த வீடுகளை அவர்களுக்கு உடனடியாகக் கட்டிக் கொடுக்கவும் அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: முதலாவதாகப் பணம் பட்டுவாடா செய்யப்படவில்லை என்று குறிப்பிட்டார்கள். பணம் பட்டுவாடா செய்யப்பட வேண்டும் என்பதற்கு உத்தரவு பிறப்பித்தாகி விட்டது. அப்படிச் செய்யப்படவில்லையென்றால் அது விரைவில் செய்யப்படும். இரண்டாவதாக, அவர்களுக்கெல்லாம் மாடி வீடு கட்டிக்கொடுக்கப்படுமா என்று கேட்டார்கள். அந்த விவரம் என்னிடம் இல்லை.

திரு. ஏ. செல்வராஜ்: அமைச்சர் அவர்கள் குடிசை மாற்று வாரியத்திடம் கேட்டால் இந்தத் தகவல் கிடைத்துவிடும். ஏற்கனவே சேர்க்கப்பட்டு இப்போது நிறுத்திவைக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த தகவலுக்கு நன்றி.